JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.256/2019
PW.9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்லதுரை | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | ராமசாமி | தொழில் | ரைஸ்மில்லில் வேலை |
| கிராமம் | சாம்பவர் வடகரை | வயது | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 04.06.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:-

நான் தற்போது சாம்பவர் வடகரையில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு கிணற்று வேலை பார்த்தேன். தற்போது ரைஸ்மில்லில்வேலை செய்கிறேன். 1வது எதிரி ராமசாமி என்ற துரைபாண்டி, 2 வது எதிரி கோமதிநாயகம் ஆகியோர்களை தெரியும். வீஞ்சு முதலாளி துரைபாண்டி கிணற்று உரிமையாளர் கோமதி நாயகம், அசா.1 முருகன், அசா.2 மாரியப்பன் ஆகியோர்களை தெரியும். அசா.3 தெய்வநாயகம் தெரியாது. அசா.4 கார்த்திக் தெரியும். அசா.5 கணேசன் தெரியும். அசா.6 மணிகண்டன் தெரியாது. அசா.7 ஐஸ்வர்யா தெரியாது. அசா.8 மீராசுந்தரி தெரியாது. முருகன் மனைவியை தெரியும். வழக்கில் இறந்து போன சுப்பிரமணியன் என்ற சமுத்திரம் தெரியும். 29.08.2017 ம் தேதி கிணற்று வேலைக்காக 8 நபர்கள் குத்துக்கல் வலசையில் உள்ள ஒரு நபரின் வீட்டிற்கு சென்றோம். காலையிலிருந்து 12.30 மணி வரை நான் வீஞ்சை ஓட்ட எந்த பிரச்சினையும் இல்லாமல் இருந்தது. 12.45 மணியளவில் வீஞ்சில் 5 நபர்கள் சமுத்திரம், மாரியப்பன், ராஜீ, ராஜகோபால், முருகன் ஆகியோர்கள் பெட்டியின் மேலே வந்து கொண்டிருந்தார்கள். பெட்டி சைடு வாங்கி சுவர் தட்டியது. ரோப்பில் உள்ள போல்ட் கட் ஆகி 5 நபர்களும் கீழே விழுந்து விட்டார்கள்.

சமுத்திரம் சம்பவ இடத்திலே இறந்து விட்டார். மற்ற 4 நபர்களுக்கும் காலில் காயம் ஏற்பட்டது. இதைக் கேள்விபட்டதும் வீஞ்சு

ஓனர் அங்கு வந்து போல்டை மாட்டி பார்த்தார். மாட்ட முடியவில்லை. பின்னர் அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார்கள். போலிஸ் வருகிறது என்று சொல்லவும் வீஞ்ச் ஓனரும் கிணற்றுக்காரர்களும் ஓடி விட்டார்கள். நான் மட்டும் தான் அங்கிருந்தேன். காயம் பட்ட நபர்களை திருநெல்வேலிஅரசுமருத்துவமனை மற்றும் தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். வீஞ்சுவின் தன்மை பழுதடைந்திருந்தது. நான் இரண்டு நாட்களுக்கு முன்பாக உரிமையாளரிடம் அதைப்பற்றி கூறினேன். அவர் என்னிடம் ஓட்டு பார்த்து கொள்ளலாம் என்று கூறிவிட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்புப வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi